பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

24 12 2024 TUESDAY 6.30 PM

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி, புதுதில்லியில் இன்று பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து பேசினார்.
- குற்றவியல் வழக்கு விசாரணையை விரைவுபடுத்துமாறு அனைத்து மாநிலங்களையும் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டுள்ளார்.
- இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.
- கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் மத்திய அரசின் அனுமதி பெற்றதிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் முடிக்கப்படும் என சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கூறியுள்ளது.
- இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் வெஸ்ட் இன்டீஸ் அணி வெற்றிபெற 359 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>>

புதுதில்லி சென்றுள்ள தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி இன்று பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது பிரதமருடன் பயனுள்ள ஆலோசனை மேற்கொண்டதாக ஆளுநர் மாளிகை செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மாநில மக்கள், தமிழ் மொழி, இலக்கியம் மீது அளவற்ற அன்பு செலுத்தும் பிரதமருக்கு, தமிழக மக்கள் சார்பில், ஆளுநர், பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பான செயலிகளை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் பயன்படுத்த வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று, இந்த சட்டங்களை அமல்படுத்துவது குறித்து தேசிய குற்ற ஆவண காப்பக அதிகாரிகளுடனான ஆய்வுக்கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்த அவர், அனைத்து குற்றவியல் வழக்குகளிலும் விசாரணை நடைமுறையை விரைவுபடுத்துமாறு அறிவுறுத்தினார்.

மேலும், குற்றவியல் கண்காணிப்பு கட்டமைப்பு செயல்முறையின் முன்னேற்றம் குறித்து மூத்த காவல்துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதுடன், பயோ மெட்ரிக் தொழில்நுட்பத்தை பயன்படுத்துமாறும் திரு அமித் ஷா வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க, தூதரக ரீதியில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கருக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில், ராமேஸ்வரத்தை சேர்ந்த 17 மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மீனவர்களின் இரண்டு விசைப்படகுகளையும் இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த 20-ஆம் தேதி நாகை மாவட்டம் கோடியக்கரையை சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கையை சேர்ந்த அடையாளம் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியிருப்பதையும் முதலமைச்சர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்கள் மீதான இதுபோன்ற தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் திரு மு.க.ஸ்டாலின், வெளியுறவுத்துறை அமைச்சரை கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் பணிக்கான SET எனப்படும் மாநில தகுதி தேர்வை ஆசிரியர் தேர்வு வாரியமே நடத்தும் என உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், பல்கலைக்கழக மானியக்குழு மூலம் நடத்தப்பட வேண்டிய தேசிய தகுதி தேர்வான NET தேசிய தேர்வு முகமை மூலம் நடத்தப்படுவதைபோல, SET தேர்வும் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் என கூறியுள்ளார்.

இணையவழி தேர்வு உட்பட இதற்கான நிர்வாக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், வாரியத்திடம் போதுமான அளவு உள்ளதாகவும், திரு கோவி செழியன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசின் அனுமதி கிடைக்கப்பெற்றதில் இருந்து மூன்றாண்டுகளுக்குள் பணிகள் முடிக்கப்படும் என சென்னை மெட்ரோ ரயில் திட்ட மேலாண்மை இயக்குனர் திரு சித்திக் தெரிவித்துள்ளார்.

கோவை மெட்ரோ ரயில் திட்டம் குறித்து, கோவையில் இன்று அதிகாரிகளுடன் ஆய்வு செய்தபின் அவர் செய்தியாளர்களிடம் பேசினார்.

*(வாய்ஸ் பைட் - சித்திக் - 47 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

திருவண்ணாமலை அண்ணாமலையார் மலைப்பகுதியில் மண் சரிவால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைக்கு, உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு நிரந்தர தீர்வுகாணப்படும் என பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு கூறியுள்ளார்.

நிலச்சரிவால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு சமுத்திரம் ஊராட்சிப்பகுதியில் தற்காலிக வீடுகட்டும் பணியை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இப்பகுதியில் பட்டா இல்லாத வீடுகள், பட்டா இருந்தும் வெளியேற விரும்புவோர் குறித்த கணக்கெடுப்பு நடைபெற்று வருவதாகவும் திரு எ வ வேலு தெரிவித்தார்.

<<<<<<>>>>>

சேலம் ரயில்வே கோட்டத்தில் உள்ள ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படுவதன்மூலம், ரயில்வேத்துறைக்கு வருவாய் ஈட்டப்பட உள்ளதாக கோட்ட ரயில்வே முதுநிலை வணிக மேலாளர் திரு பூபதி ராஜா தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் அவர் இதனை தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - பூபதி ராஜா — 24 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையிலிருந்து காளிங்கராயன் வாய்க்கால் பகுதி இரண்டாம் போக பாசனத்திற்காக நாளை முதல் தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

மொத்தம் 120 நாட்களுக்கு திறந்துவிடப்படும் தண்ணீரின் மூலம், பவானி, ஈரோடு, மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி வட்டங்களில் உள்ள 15 ஆயிரத்து 743 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும்.

<<<<<<>>>>>

1964-ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலின்போது தனுஷ்கோடி நகரம் பேரழிவுக்கு ஆளானதன் 60-ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது.

புயலில் உயிரிழந்தோருக்கு மீனவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

*(சவுண்ட் பைட் - கார்த்திகேயன் - 42 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் ஊடக மையம் மூலம், "போதையில்லாத தமிழ்நாடு" என்ற தலைப்பிலான விழிப்புணர்வு போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பாராட்டு சான்றிதழ்களை அத்துறைக்கான அமைச்சர் திரு சாமிநாதன் சென்னையில் இன்று வழங்கினார்.

-----------------

நாமக்கல் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இரண்டு சாலைகளை 41 லட்சம் ரூபாய் செலவில் சீரமைக்க மாவட்ட ஆட்சியர் திருமதி உமா உத்தரவிட்டுள்ளார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் மதுவிலக்கு சட்டத்தின்கீழ் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் வரும் 30-ஆம் தேதி மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் ஏலம் விடப்படும் என காவல்துறை தெரிவித்துள்ளது.

-----------------

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு சென்னையில் எட்டாயிரம் காவல்துறையினர் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக பெருநகர காவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் வெஸ்ட் இன்டீஸ் அணி வெற்றிபெற 359 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வதோதராவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 358 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக Harleen Deol 115 ரன் எடுத்தார்.

இதையடுத்து, தற்போது விளையாடி வரும் வெஸ்ட் இன்டீஸ் அணி சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்பிற்கு 36 ரன் எடுத்துள்ளது.

-------

19 வயதுக்கு உட்பட்டோருக்கான டுவென்டி – டுவென்டி மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியின் 15 பேர் கொண்ட பட்டியலை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

**<<<<<<END>>>>>>**